
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்

மைலம்பட்டி ஊராட்சி

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், மைலம்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம், க.ச.எண்கள்.**45/5B** மற்றும் **45/6B**-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.



இணையதள விண்ணப்ப எண் : 9E9VO6PB

அளவு : **1:400**

வ

குறிப்பு:-

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 1.94 ஏக்கர் (அ) 7850.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 37

மனைப்பிரிவின் எல்லை **(As per FMB)** :

நிலையிலுள்ள சாலை :

பொது ஒதுக்கீடு :

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:-

மனைப்பிரிவு சாலை (ம) முலை முடுக்கு பரப்பு : 2327.91 ச.மீ :

மனைப்பிரிவு சாலை பரப்பளவு நீங்கலாக மனைகளின் பரப்பளவு = (மனைப்பிரிவின் மொத்த பரப்பு - உத்தேச சாலை பரப்பு)
(7850.00 ச.மீ - 2327.91 ச.மீ) = 5522.02 ச.மீ

பூங்காவுக்கு தேவையான பரப்பளவு:-

(மனைப்பிரிவின் மொத்த பரப்பு - உத்தேச சாலை பரப்பு) **X 10%**
(7850.00 ச.மீ - 2327.91 ச.மீ)**X 10%**

தேவையான பரப்பளவு = 552.20 ச.மீ (10%)

பூங்கா ஒதுக்கீடு அரசாணை எண்.18 ந.நி. (ம) கு.வ.து. நாள்: 04.02:2019-ன் படி **TNCDBR-19**-ல் விதி எண்:**47(6)**-ன் படி **O.S.R.**-க்கு ஈடாக அரசு வழிகாட்டி மதிப்பு தொகை மனுதாரரால் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.

பொது உபயோகம் (ம) **TANGEDCO**-விற்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பரப்பளவு:-

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலை பரப்பு) **X 0.5%**
(7850.00 ச.மீ - 2327.91 ச.மீ) **X 0.5%**
தேவையான பரப்பளவு = 5522.02 ச.மீ **X 0.5% = 27.61** ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பொது உபயோகம் பரப்பளவு : 46.50 ச.மீ (0.84%) :
ஒப்படைக்கப்பட்ட **TANGEDCO** பரப்பளவு : 52.40 ச.மீ (0.95%) :

முலை முடுக்கு:-

12.0மீ. வரை உள்ள சாலைகளுக்கு 1.50மீ. X1.50மீ. விட்டபடல் வேண்டும்.

நிபந்தனைகள்:-

1. அரசாணை எண் 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019-ன்படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள், பொது உபயோக ஒதுக்கீடு உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. (ம) அரசாணை எண் : 16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.01.2020-ன்படி **TANGEDCO** ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சியில் உறுதி செய்துகொள்ளவேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறிய்ப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் 60CM X 120CM அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்படவேண்டும்.
6. அரசாணை எண் 181 வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சி துறை நாள்: 09.02.2020-ன்படி உத்தேச மனைப்பிரிவில் சாலைகள், மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
7. நிலப்பயன் மாற்ற அரசாணை (2ப) எண் : 418 வீ.வ (ம) ந.வ.து நாள்: 13.11.2024-ன்படியும் மற்றும் செயற்பொறியாளர், நீர்வளத்துறை அவர்களின் கடித எண்.வப/இவ.அ.3/கோ.73/557எம்/2024 நாள் 08.07.2024-ன்படியும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

மு.வ./(கோ.உ.தி.கு) எண்:**587/2025**
திட்ட அனுமதி எண் :**690/2025** } இணையதள வழி

உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர் (மு.கூ.பொ.)
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்
கோயம்புத்தூர்

Signature valid
Signature valid